இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 25-03-2024

# ஆளுநர் வெளியேற வேண்டாமா?

உயர் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தண்டனையையும், தீர்ப்பையும் உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்தது. இதன் மூலம் அவர் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக ஆகிறார். இதனை பேரவைத் தலைவரும் அறிவித்தார். இதைத் தொடர்ந்து அவரை மீண்டும் அமைச்சராக ஆக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள். இதனை ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எழுதிக் கேட்கிறார்கள்.

**உச்சநீதிமன்றத் தீர்ப்பு மிகத் தெளிவாக இருப்பதால் உடனடியாக முதலமைச்சரின் எண்ணத்தை ஏற்றுக் கொண்டு க.பொன்முடி அவர்களுக்கு மீண்டும் பதவியேற்பு உறுதிமொழி நிகழ்வை ஆளுநர் நடத்தி இருக்க வேண்டும். ஆனால், ஆளுநர் ரவி அவ்வளவு நல்லவரும் அல்ல, சட்டம் அறிந்தவரோ, யார் பேச்சைக் கேட்பவராகவோ இல்லை.**

**திருக்குறளையும் வள்ளலாரையும் வைகுண்டரையும் அரைகுறையாகப் படித்ததைப் போல சட்டத்தையும் அரைகுறையாகப் படித்தவரை ஆளுநராக வைத்திருந்தால் என்ன நடக்கும்? இப்படித்தான் இருக்கும். தன்னுடைய ஞானப்பிரதாபத்தைக் காட்டுவதைப் போல ஒரு அறிக்கையை ஊடகங்களில் கசிய விட்டுவிட்டு, பின்னர் அதனை அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.**

**யாரை அமைச்சராக வைக்க வேண்டும் என்பது முதலமைச்சரின் விருப்புரிமை சார்ந்தது. அதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், தான் நினைப்பதை எல்லாம் செய்வதற்கான அதிகாரம் கவர்னருக்கு இருப்பதாக ரவி நினைத்துக் கொள்கிறார். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கூட கவர்னர் ஜெனரல்களுக்கு அத்தகைய அதிகாரம் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சி சொல்வதைக் கேட்டுச் செய்ய வேண்டியது தான் அந்தக் காலத்து கவர்னர் ஜெனரல்களின் அதிகாரம் ஆகும்.**

இன்றைய குடியாட்சி காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத் தான் அனைத்து அதிகாரமும் இருக்கிறது. தலைமை அமைச்சரான பிரதமருக்குத்தான் அனைத்து அதிகாரங்களும் உண்டு. குடியரசுத் தலைவருக்கு அல்ல. அதே போல மாநிலங்களில் முதலமைச்சர்களுக்குதான் அனைத்து அதிகாரமும் உண்டு. ஆளுநர்களுக்கு அல்ல. சில சடங்குகளைச் செய்வதற்காக இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். அவ்வளவுதான். இதுவும் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தின் மிச்ச சொச்சங்களே. மேலும், உச்சநீதிமன்றத்தின் பல்வேறு வழக்குகள் ஆளுநர்கள் அதிகாரமற்றவர்கள் என்பதை விளக்கி இருக்கின்றன.

**கடந்த மூன்றாண்டு காலத்திலும் இதே போன்ற எத்தனையோ தீர்ப்புகளில் ஆளுநர்களுக்கு அறிவுரை சொல்லி மூலையில் உட்கார வைத்துள்ளன உச்சநீதிமன்றங்கள்.**

மாண்புமிகு அமைச்சர் பொன்முடி தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு சட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஆகும். “உச்சநீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு பொன்முடியின் தண்டனையையும் தீர்ப்பையும் நிறுத்தி வைக்கிறது என்றால் இடைக்காலமாக ரத்து செய்யப்படுகிறது என்று பொருள். இப்படி உத்தரவிட்ட நிலையில் தண்டனையை ரத்து செய்யவில்லை என்று ஆளுநர் எப்படிச் சொல்கிறார்? இப்படிச் சொல்லும் அவசியம் ஏன் ஏற்பட்டது. அவருக்கு ஆலோசனை சொல்பவர்கள் முறையாக ஆலோசனை சொல்வதில்லை என்று தோன்றுகிறது. தமிழ்நாடு ஆளுநர் அங்கு உட்கார்ந்து என்ன செய்து கொண்டு இருக்கிறார். அவரது செயல்பாடுகள் தீவிரமாக பார்க்க வேண்டியதாக உள்ளன. அது பற்றி மேலும் இந்த நீதிமன்றத்தில் சப்தமாக நாங்கள் சொல்ல விரும்பவில்லை” என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பி.பார்த்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு சாட்டையால் அடித்தது.

**“ஓர் அமைச்சர் குறித்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கலாம். ஆனால் அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது என்பது தான் முக்கியம். ஆளுநர் என்பவர் ஒரு மாநிலத்தின் காப்பாண்மைத் தலைவர். மாநில அரசுக்கு அறிவுரை கூறும் அதிகாரம் மட்டுமே அவருக்கு உண்டு. ஒருவரை அமைச்சரவையில் சேர்க்க முதலமைச்சர் விருப்பம் தெரிவிக்கும் போது அதை ஆளுநர் பரிசீலித்து நடைமுறைப்படுத்த வேண்டும். அதுதான் நாடாளுமன்ற ஜனநாயகம்” என்று தெள்ளத் தெளிவாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமர்வு சொன்னது.**

இதற்குப் பிறகும் பிரச்சினையை புரிந்து கொண்டு ஆளுநர் செயல்படுவார் என்ற நம்பிக்கை உச்சநீதிமன்றத்துக்கு இல்லாததால், ஆளுநருக்கு கெடுவும் விதித்தார்கள் நீதியரசர்கள். “பொன்முடி விவகாரத்தில் 24 மணி நேரத்துக்குள் ஆளுநர் பதில் அளிக்க வேண்டும். இல்லையெனில் அரசியலமைப்புச் சட்டப்படி செயல்படுமாறு ஆளுநருக்கு உத்தரவிட நேரிடும்” என்று நீதிபதிகள் எச்சரிக்கையே செய்தார்கள். இவை அனைத்தும் மார்ச் 21 ஆம் தேதி காலையில் நடந்த விவாதங்கள் ஆகும். உடனடியாக 22 ஆம் தேதி காலையில் பதவியேற்பு விழாவை ஆளுநர் நடத்தி இருக்க வேண்டும். உச்சநீதிமன்றத்தையே மீறும் வகையில் தாமதம் செய்துள்ளார் ஆளுநர்.

22 ஆம் தேதி உச்சநீதிமன்றம், ஆளுநரை கண்டிப்பதோடு நிறுத்தாமல் அவர் எதற்காக பதவியில் இருக்க வேண்டும் என்று கேட்டுவிடக் கூடாது அல்லவா? அதனால் 22 ஆம் தேதி மதியம் 3.30 மணிக்கு மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களுக்கு பதவியேற்பு விழாவை நடத்தி முடித்துவிட்டார் ஆளுநர்.

**ஆளுநர் இப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பின் படி பதவியேற்பை செய்து கொடுத்துவிட்டார். மனச்சாட்சிப்படி அவர் எப்போது வெளியேறப் போகிறார்?**



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் தி.மு.க. தேர்தல் பணிமனையை கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேட்பாளர் கதிர் ஆனந்த், மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் சாரதிகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

# மத்திய சென்னையில் - தேர்தல் பணிமனைகள்!

## இன்று வேட்பாளர் தயாநிதி மாறன் - மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு திறந்து வைக்கின்றனர்!

*சென்னை,மார்ச்.25-*

*கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற வேட்பாளருமான தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் நிலைக் குழுத் தலைவருமான நே.சிற்றரசு ஆகியோர் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் உள்ள பல்வேறு வட்டங்களில், இன்று (25.3.2024) நாடாளுமன்றத் தேர்தல் பணிமனைகளைத் திறந்து வைக்கின்றனர்.*

*அதன் விவரம் பின்வருமாறு :*

*காலை 10.00 மணியளவில் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இடம் : புலியூர் 2வது சந்து, கோடம்பாக்கம்*

*காலை 10.15 மணியளவில் 112அ வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : டிரஸ்ட்புரம் 6வது குறுக்கு தெரு, கோடம்பாக்கம்.*

*காலை 10.30 மணியளவில் 112வது வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : புது மார்க்கெட் தெரு, சூளைமேடு.*

*காலை 10.45 மணியளவில் 109அ வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : பஜார் தெரு, இன்பராஜபுரம்*

*காலை 11.00 மணியளவில் 109வது வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : பெருமாள் கோவில் தெரு அருகில், சூளைமேடு*

*காலை 11.15 மணியளவில் 110வது வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் :ஜெயலட்சுமி புரம், நுங்கம்பாக்கம்.*

*காலை 11.30 மணியளவில் 110அ வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : பச்சையம்மன் கோவில் தெரு. நுங்கம்பாக்கம்.*

*25.03.2024 (திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில்*

*கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக் கழக வேட்பாளருமான தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் நிலைக் குழுத் தலைவருமான நே.சிற்றரசு ஆகியோர்*

*மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயப்பேட்டை எம்.எஸ்.மஹாலில் நடைபெறும் காங்கிரஸ் கட்சியின் செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.*

*அதனைத் தொடர்ந்து மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்குப் பகுதியில் உள்ள பல்வேறு வட்டங்களில், நாடாளுமன்றத் தேர்தல் பணிமனைகளை திறந்து வைக்கின்றனர்.*

*அதன் விவரம் பின்வருமாறு :*

*மாலை 5.00 மணியளவில் அண்ணா நகர் வடக்கு பகுதிக்கான தேர்தல் பணிமனையைத் திறந்து வைக்கின்றனர்.*

*இடம் : 640, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தகரை, சென்னை 29*

*மாலை 5.15 மணியளவில் 100வது வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : 34/1 கும்மாளம்மன் கோவில் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை.*

*மாலை 5.30 மணியளவில் 100அ வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : 57, 21வது குறுக்குத் தெரு, டி.பி. சத்திரம் பிரதான சாலை, சென்னை 30.*

*மாலை 5.45 மணியளவில் 101வது வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : 210/66A பிளாட் எண்.206, கீழ்ப்பாக்கம் கார்டன், சென்னை 10.*

*மாலை 06.00 மணியளவில் 101அ வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : 28/29 புல்லா அவென்யூ, செனாய் நகர், சென்னை 30*

*மாலை 6.15 மணியளவில் 102வது வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் :582/638, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தகரை, சென்னை, ஸ்கை வாக் மால் எதிரில்*

*மாலை 6.30 மணியளவில் 102அ வட்டத்துக்கான தேர்தல் பணிமனை*

*இடம் : 11, டாக்டர் அம்பேத்கர் நகர், நியூ ஆவடி சாலை சென்னை 30*

